செ.வெ.எண். 46 நாள்: 20.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஒன்றியம் எஸ்.முதுகானப்பள்ளி ஊராட்சி சித்தவீரையன் ஏரி ரூ.5 லட்சம் மதிப்பிலும் , சூளகிரி ஒன்றியம் மோரனப்பள்ளி ஏரி கன்சாய் நேரலக் பெயின்ட் நிறுவனம் சார்பில் ரூ.17 லட்சம் மதிப்பிலும் என ரூ.22 லட்சம் மதிப்பில் குடிமராமத்து மற்றும் ஜல்சக்தி அபியான் திட்டத்தின் கீழ் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று (20.08.2019) பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம் 575 ஏரி, குளம், குட்டைகள் தூர்வாரபடுகிறது. பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்பை வழங்கி குடிமராமத்து பணி மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக நடைபெற உறுதுனையாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் வேண்டுகோள்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஒன்றியம் எஸ்.முதுகானப்பள்ளி ஊராட்சி சித்தவீரையன் ஏரி மற்றும் சூளகிரி ஒன்றியம் மோரனப்பள்ளி ஏரியை துார்வாரும் பணிகளை துவக்கி வைத்தும் ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பேடரப்பள்ளி ஏரி மைக்ரோ இன்டஸ்ட்ரிஸ் சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பிலும், டைடான் ஜீவல்லரி சார்பில் 10 ஏக்கரில் ரூ.1 கோடி மதிப்பில் புதியதாக நடைபாதை, பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களுடன் உறுவாக்கப்பட்ட சிப்காட் ஏரி துார்வாரும் பணிகளையும், நாகொண்டப்பள்ளி ஏரி ஜல்சக்தி அபியான் திட்டத்தின்கீழ் டைடான் நிறுவனத்தின் மூலம் ரூ.5 லட்சம் மதிப்பில் தூர் வாரி கரைகளின் மீது மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதையும் , எடைய நல்லூர் கிராமத்திலுள்ள முகில ஏரி குடிமராத்து திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பில் நடைபெறும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று (20.08.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 10 ஒன்றியங்களில் தற்போது 100 ஏரிகள் மற்றும் 325 குளம், குட்டைகள் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. 150 ___ க்கும் மேற்பட்ட ஏரிகளில் ஜல்சக்தி அபியான் நீர் மேலாண்மை திட்டத்தின் மூலம் தொண்டு நிறுவனங்கள்,தொழிற்சாலைகள், கல்லூரிகள் சார்பில் நடைபெற்று வரும் துார் வாரும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இப்பணிகள் கடந்த மாதம் தொடங்கப்பட்டு ஏரி கரைகள் உயர்த்தியும், தாழ்வான பகுதிகளை கண்டறிந்து அதிக அளவில் மழை நீரை சேமிக்கவும், குளம் குட்டைகள் மற்றும் ஏரிகளுக்கு வரும் நீர் வரத்து கால்வாய்கள் துார் வாரும் பணிகள் நடைபெறுகிறது. இதனால் கடந்த ஒரு வாரமாக பெய்யும் மழையின் மூலம் ஒரு சில ஏரிகள் , குட்டைகள் 25 சதவீதம் தண்ணீர் நிரைந்துள்ளது . மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம் 575 ஏரி, குளம், குட்டைகள் தூர்வாரபடுகிறது. பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்பை வழங்கி குடிமராமத்து பணி மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளில் சிறப்பாக நடைபெற உறுதுனையாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது ஒசூர் கோட்டாச்சியர் திரு.குமரேசன், மாநகராட்சி ஆணையாளர் திரு.பாலசுப்பிரமணியன், மாசு கட்டுப்பாட்டு வரிய செயற்பொறியாளர்கள் திரு.பழனிச்சாமி, திரு.ரவிசந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ராமசந்திரன்,திரு.பாலாஜி,திருமதி.ஆப்தா பேகம், உதவி செயற்பொறியாளர் திரு.சிவசங்கரன், ஒன்றிய பொறியாளர் திரு.சம்பத், வட்டாட்சியர் திரு.செந்தில் குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், கன்சாய் நேரலக் பெயின்ட் நிறுவன மேலாளர் திரு.தமிழ்வானன், திரு.பாபு, ஓசூர் மக்கள்

சங்க பிரதிநிதிகள், டைடான் நிறுவன அலுவலர் திரு.பிரபு, அலுவலர்கள், பொது மக்கள் மற்றும் விவசாயி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**